Grants for New Secondary Schools.

* 114 *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that, for the Secondary Schools newly opened during 1978-79, non-teaching staff and equipment grants have not been sanctioned till 15th June 1980; and

(*b*) if so, the reasons for the delay in sanctioning them?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை. 1978-79 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட 32 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியரல்லாத ஊழியர்களின் பணியிடங்கள் 30—4—1980-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞான கருவிகளைப் பொறுத்தமட்டில், உயர்நிலைப் பள்ளியாக துவங்க அனுமதிக்கும்போது அந்தந்த பள்ளிக் கட்டிடக் குழு தேவையான விஞ்ஞானக் கருவிகள் முதலியவைகளை வழங்க ஒத்துக்கொள்கிறது. அரசைப் பொறுத்த மட்டில் முன்னுரிமை அடிப்படையில் விஞ்ஞானக் கருவிகள் வாங்க மான்யம், நிதி நிலைமைக்கேற்ப வழங்கப்படுகிறது.

திரு. த. சந்தோஷம் : ஒரு உயர் நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக உயர்த்தும்போது, அதற்கான Non-teaching staff, equipment எல்லாம் சேர்த்து அனுமதி அளித்துவிட்டால், உதவியாக இருக்கும். இல்லாவிட்டால் பலவிதமான சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இனி மேலாவது இப்படி மேல்நிலைப் பள்ளிகளாக உயர்நிலைப் பள்ளிகள் உயர்த்தப்படும்போது, Non-teaching staff, equipment இவைகளுக்கெல்லாம் சேர்த்து அனுமதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தும்போது, அவற்றுக்குத் தேவையான ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் பணியிடங்களுக்கு உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும் என்ற கருத்து சரியான கருத்து. இதை அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. பா. ரா. தாமஸ் : பல அரசுப் பள்ளிகளில் ஆசிரியர் அல்லாத அலுவலர்கள் இல்லாத காரணத்தால், தலைமையாசிரியர்களுடைய நேரம் அந்த அலுவலகப் பணிகளிலே செலவிடப்படுகின்ற நிலைமை இருப்பதால், கல்விப் பணி சரியாக இல்லாமல் இருக்கிறது. ஆகவே, ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் எங்கெல்லாம் இல்லையோ அங்கெல்லாம் அந்தப் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1981 மார்ச் 5]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1978-79-ல் துவங்கப்பட்ட 32 அரசு உயர் நிலைப் பள்ளிகளுக்கு 30—4—1980-ல் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு துவக்கப்பட்ட பள்ளிகளுக்கு இன்னும், அனுமதிக்கப்படவில்லை. பள்ளிகளைத் துவக்கும்போதே அந்தப் பணியிடங்கள் அனுமதிக்கப்படும் என்ற கருத்து பரிசிலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் அந்த முறையிலே காணலாம்.

இன்டக்டட் ஆசிரியர்களின் சிறப்பூதியம்.

* 115. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இன்டக்டட் ஆசிரியர்களின் சிறப்பூதியத்தை ரூ 25 லிருந்து ரூ. 50 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

(முற்பகல் 10-40)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தொழிற் பிரிவு (மெக்கானிக்) ஆசிரியர்கள் 25 பாட வேளைகளை எடுத்த போதிலும், அவர்களுக்குச் சிறப்பு ஊதியமான ரூ. 25 வழங்கப்படாதிருப்பதை அரசு அறியுமா ? எனவே வருங்காலத்திலாவது அதை அவர்களுக்கு வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அவர்களுக்கான சிறப்பு ஊதியத்தை உயர்த்தாவிட்டாலும்கூட, அத்தகைய ஆசிரியர்கள் தங்களின் படிப்புத் தகுதியை உயர்த்திக்கொள்ள—அதாவது மேற்படிப்புக்குத் தங்களைத் தயார் செய்து கொள்ள—அரசு உதவி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போதே ஆசிரியர்கள் எம்.ஏ. போன்ற பட்டங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. அதை ஆசிரியர்களும் அதிகமான அளவுக்குப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால் சயன்ஸ் பாடங்களில் எம்.எஸ்ஸி பட்டம் பெறுவதற்கான வாய்ப்புகள் கடினமாக இருப்பதால், அதற்கான வகையில் சிறப்பு